

அமரர்

# சுப்பிரமணியம் சிவலோகநாதன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு வெளியீடு

**30.10.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

# சுப்பிரமணியம் சிவலோகநாதன்

(சொக்கர் / சிவா (த பினான்ஸ் கொம்பனி, லிமிட்டெட்)

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## 31ம் நாள் நினைவு மலர்

*30.10.2017*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை அன்புடன் வளர்த்து அமரராகிவிட்ட
எமது அன்பு அப்பாவிற்கு.

# சமர்ப்பணம்

பண்பிலே தெய்வமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
இன்சொல்பேசி இனிதே பழகி
அன்புடனும், நேசத்துடனும் வாழ்ந்து
எமது குடும்பத் தலைவராக இருந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது இதயத்தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற வேண்டுமென
இறைவனைப் பிரார்த்தித்து
அமரர் தன் பாதக்கமலங்களில்
இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மண் மகிழ

14
.
08
.
1948



கண் நெகிழ

30
.
09
.
2017

அமரர்

# சுப்பிரமணியம் சிவலோகநாதன்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு ஏவிளம்பி புரட்டாதித் திங்கள் பூர்வபக்க தசமிதனில்
நீண்ட புகழ் பூத்த சிவலோகநாதன் எனும் செம்மல்
வேண்டும் வரமளிக்கும் சிவபூதவராயர் திருவடி சென்று
சேர்ந்தார் என்று அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

ஆலந் தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப்பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல் கண்டுகளிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வி லென்வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதமிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே.

### திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

### திருப்பல்லாண்டு

ஆரார்வந் தார் அமரர் குழாத்தில்
அணியுடைஆ திரைநாள்
நாராயண னொடுநான் முகன்
அங்கி யிரவியும் இந்திரனும்
தேரார்வீதி யில்தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார்தொல் புகழ்பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்புராணம்**

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிக்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

**திருப்புகழ்**

துள்ளுமத வேட்கை கணையாலே
தொல்லை நெடு நீலக்கடலாலே
மெல்லவருஞ் சோலைக் குயிலாலே
மெய்யுரு குமானைத் தருவாயே
தெள்ளு தமிழ்ப் பாடத் தெளிவோனே
செய்யுகுமரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே.

**வாழ்த்து**

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரிய சித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலக முழுவதும் நீக்கமற
ஒன்றாய்நிற்கும் பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்செென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன்எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் ஓர் ஐங்குணமாகி

வதிவான் எவன் நீரிடை நான்காய்

நண்ணி அமர்வான் எவன்தீயின்

மூன்றாய் நவில்வான் எவன் வளியின்

எண்ணும் இரண்டு குணமாகி

இயைவான் எவன் வானிடை ஒன்றாம்

அண்ணல் எவன் அக்கணபதியை

அன்பிற் சரண்ம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில்

பற்றற்கரிய பரன் யாவன்

பாச அறிவும் பசுஅறிவும்

பயிலப் பணிக்கும் அவன்யாவன்

பாச அறிவும் பசுஅறிவும்

பற்றி மேலாம் அறிவான

தேசன் எவன் அக்கணபதியைத்

திகழச் சரணம் அடைகின்றோம்.

இந்த காரிய சித்தி மாலையை தினந்தோறும் மூன்று வேளைகளிலும் பாராயணம் செய்தால், சகல காரியமும் சித்தி பெறும். இரண்டு மாதங்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் அரசர்களும் வசியமாவர். கல்வி, செல்வம் விருத்தியாகும் என விநாயகப் பெருமானே திருவாய் மலர்ந்தருளிய துதி இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசஷ்டி கவசம்

காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்குங்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செய்யும் மயில்வாகனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீரிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியிலம்
ஈராது செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொழி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகெண
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகுவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கத்ர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பரவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர் வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருல் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழுக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரசிகாட் டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிட கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெறி
தனலெறி தணலெறி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனிததொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசஷ்யங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப்பிருதி
பக்கம் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பக்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர் கடுஞ்சிறை விடுத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் அழகிய வேலா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்து திருக்கும் எந்தை முருகனை
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச விகைள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க வென்றுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவாராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் னாளும்
ஆசா ரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகித்
கந்தர் ச்'டி  கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து  உகந்து நீறணிய
அ்'டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவார்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நம்மை யளித்திடும்
நவமத னெனவும் நலடலெழில் பெறுவர்
எந்த நாளும் மீரட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாங் கவசத்தடியை
விழீயாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும்பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அ்'டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாக
சூரபத் ம்'வைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா ரணம்.

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.

## வெற்றியின் இரகசியம்

- அன்பு காட்டு, ஆனால் அடிமையாகாதே!
- இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்துபோகாதே!
- பணிவாய் இரு, ஆனால் கோழையாய் இராதே!
- கண்டிப்பாய் இரு, ஆனால் கோபப்படாதே!
- சிக்கனமாய் இரு, ஆனால் கஞ்சனாய் இராதே!
- வீரனாய் இரு, ஆனால் போக்கிரியாய் இராதே!
- சுறுசுறுப்பாய் இரு, ஆனால் பதற்றப்படாதே!
- தர்மம்செய், ஆனால் ஆண்டியாகி விடாதே!
- பொருளைத்தேடு, ஆனால் பேராசைப்படாதே!
- உழைப்பை நம்பு, ஆனால் கடவுளை மறந்துவிடாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரி காப்பு

### விநாயகர் துதி

முன்னிற்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமல் கா.

### வேண்டுதல் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளித் தாயே
கொடியமகி ஷசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்ட விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்திடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்று நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாரும்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாரும்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் காண்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்று வாழ்ந்திடுவோம் ஏத்தபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றும் இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாம் தருவாள் சீர்பெருகு கௌியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களேல்லாம் ஏற்றியெனைப் போற்றிடுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்**

- மேன்மையான நோக்கம், கடமையுணர்வு, பாசம் ஆகியவை இல்லாத வாழ்க்கை மதிப்பிற்குரியதாக இருக்காது.
- காலையில் அதிகநேரம் படுக்கையில் படுத்திருக்கும் எவரும் பெருமையோ புகழோ பெற்றதில்லை.
- ஒருவரின் கடமைச் செயல் மற்றவரின் மனதை நிறைவுசெய்வதாக இருந்தால் அதுவே கடமையின் பரிசாகும்.
- கண்ணியமான மனிதன் எப்பொழுதும் நீதியாகவே சிந்தனை செய்கிறான்.
- ஆணவமும் அகம்பாவமும் பெண்ணுக்கு அழகில்லை. அடக்கமும் பொறுமையுமே பெண்ணுக்கு அணிகலனாகும்.
- தெய்வ நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் மற்றெல்லாப் பண்புகளையும் விட மேலானது. விலைமதிக்க முடியாத பொக்கிஷம்.
- உன்னால் முடிந்தவரையில் இன்று உன் பணியினை நன்றாகச் செய். நாளை அதனிலும் நன்றாகச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம சாந்தி உரை

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாண நகரிலே கோண்டாவில் கிராமத்தில் சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதிகளுக்கு மகனாக 14..08.1948ம் வருடம் திரு.சிவலோகநாதன் அவர்கள் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை தமது கிராமத்திலே அமைந்துள்ள பரஞ்சோதி வித்தியாலயத்தில் கற்றார். சிறு வயதிலேயே எல்லோரிடமும் சிரித்த முகத்துடன் பழகுதல், யார் என்ன உதவி கேட்டாலும் செய்தல், பொறுமை முதலிய குணங்களைத் தன்னகத்தே கொண்டிருந்ததன் மூலம் எல்லோராலும் பாராட்டப்பட்டார். தனது கிராமத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்வரத்தினம் தம்பதிகளின் மகளான அருளேஸ்வரி என்பவரை திருமணம் செய்து இல்லறம் நடத்தி வந்தார். தமது இல்லறத்தின் பயனாக கிடைத்தற்கரிய பேறான மக்கட் செல்வங்களைப் பெற்று அவர்களை அன்போடும், பண்போடும் வளர்த்து அவர்கள் நல்ல நிலையில் வாழ வழிவகுத்துக் கொடுத்தார்.

கடவுள் பக்தியில் சிறந்து விளங்கிய இவர் தமது கிராமத்தில் அமைந்துள்ள ஆலயங்களுக்குத் தனது குடும்பத்தினரின் உதவியோடு தம்மால் இயன்ற பல திருப்பணிகளைச் செய்து வந்தார். சிவபூதவராயர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் 7ம் நாள் (குதிரை வாகனத் திருவிழா) திருவிழாவையும், மார்கழி மாதப்பிறப்பு அபிஷேகத்தினையும், வீரபத்திரர் ஆலயத்தின் தைப்பூசத்திருவிழாவையும் வெகுசிறப்பாக நடத்தி வந்தார். தமது குல தெய்வமான தில்லைக்காளி அம்பாள் ஆலயத்தின் வசந்த மண்டபத்தையும் நிர்மாணித்துக் கொடுத்தார். அத்துடன் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல உற்சவத்தையும் வெகு சிறப்பாக நடத்தி வந்தார். அத்துடன் வருடப் பிறப்பு, தீபாவளி தினத்தின் விசேட பூஜைகளையும் சிறப்பாக நடத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தமது குடும்பத்தின் உதவியோடு தமது கிராமத்துக்கும், ஆலயங்களுக்கும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வந்த இவர் 30.09.2017 அன்று திடீரென எம்மை விட்டு பிரிந்து சென்று விட்டார் என்ற செய்தி கேட்டுப் பேரதிர்ச்சியடைந்தோம். எனினும், இவ்வுலகிலே பிறப்பவர் அனைவரும் இறப்பது இயற்கையின் நியதி என்பதை உணர்ந்து அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அன்னார் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து அன்னாரின் குடும்பத்தினர் தொடர எல்லாம் வல்ல சிவபூதவராயரும், தில்லைக் காளி அம்பாளும் துணை நிற்க வேண்டும் என வேண்டி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்
சிவஸ்ரீ .ஞானசம்பந்தர் ஜோதிநாதக்குருக்கள்
பிரதம குரு,
மனேன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயர் தேவஸ்தானம்
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கலுரை

ஈழ வள நாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணம், கோண்டாவில் வடக்கில் பழமை வாழ்ந்த ஆலயங்களில் ஸ்ரீவீரபத்திரர் ஆலயமும் ஒன்றாகும்.

இவ்வாலயத்தின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் சிவலோகநாதன் (சொக்கர்) வருடந்தோறும் தைப்பூச உற்சவத்தை சிறப்பாகக் கொண்டாடி வந்துள்ளார். எமது ஆலயத்திற்கு மின்சாரமேளம் இல்லாத நிலையில், தானாகவே முன்வந்து அதனை அன்பளிப்புச் செய்துள்ளார். மேலும் எமது ஆலய வளர்ச்சிக்காக அவரும், அவரது குடும்பத்தினரும் பல வழிகளிலும் உதவிகளை வழங்கி உள்ளனர். மேலும் அவர்தம் சந்ததியினர் வீரபத்திரர் ஆலயத்திற்கு தம்மாலான உதவிகளை வழங்கி இறைவருள் பெறவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு மனஅமைதிதர எல்லாம் வல்ல ஸ்ரீவீரபத்திர பெருமானை வேண்டுகின்றோம்.

நிர்வாக சபையினர்,
ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் சிவலோகநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழ்வது ஈழவளநாடு. ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் உள்ள சைவக்கிராமங்களில் ஒன்று தான் கோண்டாவில் ஆகும்.

யாழ்ப்பாணத்து சைவத்தமிழ் மக்கள் தமது சமயமாகிய சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் இரு கண்கள் எனப்போற்றி வாழ்பவர்களாவர். இப்படிப்பட்ட சிறப்புக்கள் உடன் விளங்க இங்குள்ள சைவ ஆலயங்களும், பாடசாலைகளுமே காரணமாகும்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கோண்டாவில் பதியில் வாழ்ந்த சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனாக 14.08.1948ம் ஆண்டு அவதரித்தவர் தான் அமரர் சிவலோகநாதன் ஆவார். அமரரின் உடன் பிறப்புக்களாக யோகராணி (கனடா), உலகநாதன் (கனடா), வைகுந்தநாதன் (கனடா) ஜெகநாதன் (நோர்வே) கமலநாதன் (நோர்வே), வேதநாயகி (கனடா), சுபந்தினி (கனடா) ஆகியோர் அவதரித்தனர்.

சிவலோகநாதன் தனது கல்வியை கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டார். கல்வியை நிறைவு செய்த பின்னர், தொழில் செய்வதற்கு முயற்சி செய்த போது, பினான்ஸ் கம்பனியில் சாரதியாகச் சேர்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கடமையைச் சிறப்புறச் செய்து வந்தார்.

பின்னர் அமரர் மணப் பருவம் அடைந்த போது கோண்டாவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்வரத்தினம் தம்பதியினரின் புதல்வி அருளேஸ்வரி என்பவரைத் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து இல்லற வாழ்வின் பயனாக சிந்துஜா, கண்ணன், அனுஷா, பிரசாந்தன் என்னும் மக்கட் செல்வங்களைப் பெற்று மனைவி மக்களைக் கண்ணை இமை காப்பது போலக் காத்து, கல்வி கற்பிப்பதுடன் நின்றுவிடாது, பிள்ளைகளின் பருவத்திற்கு ஏற்ப வளங்கள் எல்லாம் செய்து கொடுத்து வந்தார்.

பிள்ளைகள் திருமணப் பருவம் அடைந்ததும், ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் பொருத்தமான மருகர்களைத் தேடி திருமணம் செய்து வைத்தார். இதில் மூத்த மகள் சிந்துஜாவை சங்கானை கிழக்கு கந்தசாமி வள்ளியம்மை தம்பதியினரின் இரண்டாவது புதல்வரான சத்தியலிங்கம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை) என்பவரைத் திருமணம் செய்து வைத்ததன் பயனாக, அஸ்மிதா என்னும் மழலைச் செல்வத்தைப் பெற்று வவுனியா நகரில் சிறப்புடன் வாழ்கின்றனர். அமரரின் மூத்த மகன் கண்ணன் என்பவர் ஆவரங்கால் மேற்கு ஊரைச் சேர்ந்த சிவதர்மம் செல்வராணி தம்பதியினரின் நான்காவது புதல்வி சிவதுர்க்கா என்பவரை மணம் முடித்து நோர்வே நாட்டில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர்.

அமரரின் இரண்டாவது மகள் அனுஷா என்பவர் கோப்பாய் வடக்கில் வசித்து வரும் சௌந்தரநாதன் இராசேஸ்வரி தம்பதியினரின் இரண்டாவது மகன் சுரேஸ்நாதன் என்பவரைத் திருமணம் செய்து இவர்களது இல்லறப் பூங்காவில் மலர்ந்த மலர்களாக சஜித்தா, யஸ்வந், கிஷானா என்னும் மழலைச் செல்வங்களைப் பெற்று செல்வச் செழிப்புடன் நோர்வே நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

அமரரின் இரண்டாவது மகனும் குடும்பத்தில் நான்காவது பிள்ளையுமாகிய பிரசாந்தன் என்பவர் கோண்டாவில் வடக்கில் வசித்துவரும் சண்முகானந்தம் கன்னிகாதேவி தம்பதியினரின் மூன்றாவது புதல்வி அபிராமி என்பவரைத் திருமணம் செய்து செல்வச் செழிப்புடன் நோர்வே நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தனது குடும்பக் கடமைகளுடன் நின்றுவிடாது தனது ஆன்மீக ஈடேற்றத்திற்காக தங்கள் குல தெய்வமாகிய தில்லைக் காளி அம்பாளை வழிபடுவதிலும், தொண்டுகள் செய்வதிலும் ஈடுபட்டு வந்துள்ளார். இத்துடன் சிவபூதவராயர் ஆலயம், கோண்டாவில் வீரபத்திரர் ஆலயம் என்பவற்றின் அறங்காவலர் சபை உறுப்பினராகவும் கடமை ஆற்றிவந்துள்ளார்.

இவ்வுலகின் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மூன்று கடமைகள் உண்டு. முதலாவது கடமைதான் பிறந்த குடும்பத்திற்குரிய கடமையினைச் செய்தல். இரண்டாவது கடமை தனது மனைவி மக்களை சிறந்த முறையில் கட்டிக்காத்து அவர்களுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவைத்தல், மூன்றாவது கடமை சமூகத்திற்கு சேவை செய்தலும், தனது ஆன்ம ஈடேற்றத்திற்குரிய நெறியில் நிற்றலுமாகும்.

இந்த வகையில் அமரர் மூன்று கடமைகளையும் திறம்படச் செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துள்ளார். ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது முக்கியமல்ல. வாழும் காலத்தில் என்ன செய்தார் என்பதே முக்கியம். அமரர் இவ்வுலகில் 69 வருடங்கள் வாழ்ந்தாலும், வாழ்ந்த காலத்தில் மூன்று கடமைகளையும் திருப்தியாகச் செய்துள்ளார் என்பதால், அவரது ஆத்மா அவர் இடையறாது வழிபாடு செய்து வந்த தில்லைக்காளி அம்மன் பாதார விந்தங்களில் சென்று சேர்ந்து இன்புற்றிருக்க வேண்டிய காலம் வந்ததால், பிற்காலத்தில் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தாலும், மற்றவர்களுக்குப் பாரமில்லாமல், தனது சுய கௌரவத்துடனும் மரியாதையுடனும் தனது வாழ்க்கைப் பயணத்தை 30.09.2017 புரட்டாதி மாதம் 4ம் நாள் பூர்வ பக்க தசமித் திருதியில் முடித்துக்கொண்டார். அவரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

மணம் முடித்த நாள் முதலாய் என்னை மனம்
கலங்காமல் காத்தீர் ஐயா
மனம் குழம்பி சினங்கொண்டு ஒரு நாளும்
கோபித்த தில்லை ஐயா
இணைபிரியாமல் அன்றிலும் பேடும் போல
நாம் வாழ்ந்தோம் ஐயா
மனையாள் நான் தனித்திருந்து தவிக்கின்றேன்
தேற்றுவதற்கு வாருமிங்கே நீருமையா.

ஈருடலும் ஒருயிரும் போல் வாழ்ந்து
இல்லறத்தில் பெருமை பல பெற்றோமையா
சீருடனே சிறப்பு மெலாம் பெற்றுத் தந்தீர்
பாரதனில் உமையிழந்து தவிக்கின்றேன் யான்
பண்புடைய பத்தாவே யாது செய்வேன்
நேரெவருமில்லாத நிறை குணத்தோய்
நித்தமும் நான் ஏங்கியழ விட்டதேனோ!!

## மக்கள் புலம்பல்

சீராட்டிப் பாராட்டி சோறூட்டித் தாலாட்டி
சிறப்புடனே வளர்த்தெடுத்த தெய்வமே
அறிவூட்டும் கதைகள் பல சொல்லி பக்குவமாய்
படிக்க வைத்து எம்மைப் பாதுகாத்து
நேரேதும் இல்லாத துணைவர்களைத் தேர்ந்தெடுத்து
வதுவை செய்து வைத்தீர் அப்பா
பார்போற்ற நாம் வாழ பணிகள் செய்தீர் அப்பா
பகைவனாம் காலனவன் உமைப் பறித்ததேனோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தாத்தா தாத்தா என்று நாம் அழைக்கும் போது
தண்மதியாய் எமக்கு நிழல் கொடுப்பீர் ஐயா
தப்பேதும் செய்தாலும் தாங்கிக் கொண்டு எமக்கு
ஒப்பரிய சிற்றுண்டி தந்தணைப்பீர்
இப்புவியில் உமைப் போல அன்பு காட்டி இனிய
கதை சொல்ல இனியார் உள்ளார்
எப்போதும் உமை எண்ணித் தவிக்கின்றோமே
எமைத் தேற்ற யாருமில்லை ஓடிவாரீர் தாத்தா.

## மருமக்கள் புலம்பல்

பெற்றெடுத்த பிள்ளையைப் போல எம்மைக் கண்டால்
பேரிரக்கம் காட்டி உவகையோடு
பற்றதனால் பண்பான பாசத்தாலும் முறுவல் செய்து
பகலவன் போல் படரொளியைப் பரப்புவீரே
சுற்றமொடு எம்மைக் காத்து துணையும் செய்து
துன்பமது கண்டுவிட்டால் துவண்டு கொள்வீர்
பெற்றா அன்பதனால் வாடி நாம் தவிக்கின்றோம்.
வந்து எம்மைத் தேற்றுவதற்கு வாரீர் மாமா!

## சகோதரர் புலம்பல்

ஒரு வயிற்றில் உதித்து ஒரு கலத்திலுண்டு
மகிழ்ந்து வாழ்ந்தோம் அண்ணா
திருகுதாளங்கள் நாம் செய்தாலும் சினந்து
எமை வெறுக்காமல் அணைத்துக் கொள்வீர்
ஆதரித்து அமுதூட்டி அன்பு காட்டி நேர்வழியில்
செல்ல வைத்தீர் அண்ணா
சிறகொடிந்த பறவைகள் போல திகைத்து நாமும்
தேறவழியின்றி தியங்குகின்றோம்
ஒரு மரத்து கிளிகள் ஒன்றைவிட்டு ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ பறந்திட்டதோ அண்ணா

அண்ணன் தம்பி என்றும், அக்கா தங்கை என்றும் தழுவி இருந்த நாங்கள்

கூடப்பிறந்து விட்ட கொடுமையினால் மேனி கனலாய்க் கொதிக்கின்றதே

தானாட மறந்தாலும் தசை மட்டும் தனியாக தாளாமல் துடிக்கின்றதே அண்ணா

தாளாமல் துடிக்கின்றதே.

### வாழ்க்கையில் வெற்றிபெற 10 கட்டளைகள்

- நல்லவற்றைக் கூட்டிக்கொள்.
- தீயவற்றைக் கழித்துக்கொள்.
- அறிவைப் பெருக்கிக்கொள்.
- நேரத்தை வகுத்துக்கொள்.
- இன்ப துன்பங்களை சமமாக்கிக்கொள்.
- வளர்பிறை போல் அறிவை வளர்த்துக்கொள்.
- செலவைக் குறை வரவை பெருக்கிக்கொள்.
- அன்பை பெருக்கி ஆணவத்தைக் குறைத்துக்கொள்.
- நல்லவருக்கு இணையாக இரு.
- பிறரை நம்பி வாழும் வாழ்வு இணையற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் மனைவியுடன்



அமரர் இளமைக்காலத்தில் மனைவி பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலமான வாழ்விற்கு கடைபிடிக்க வேண்டியவை!!

01. இனிப்பை முதலில் சாப்பிட வேண்டும்
02. உணவு, தண்ணீர் எதுவானாலும் ரசித்து சுவைத்துச் சாப்பிட வேண்டும்.
03. ஆறு சுவைகளையும் உணவில் முடிந்தவரை சேர்த்துக் கொள்ள வேண்டும்.
04. உணவை மென்று கூழாக்கி எச்சில் நன்றாகக் கலந்து சாப்பிடவேண்டும். (நொறுங்கத் தின்றால் நூறு வயது வரை வாழலாம். வெள்ளை அணுக்களுக்கு இணையாகப் பணியாற்றக் கூடிய உமிழ் நீர் கலந்த உணவு நன்கு செரிமானமாகும்)
05. உண்ணும் போது உதட்டை மூடி வாயில் காற்றுப் புகாமல் மென்று சாப்பிடவேண்டும். வாயைத் திறந்து சாப்பிடுவது உமிழ் நீர் சுரப்பதை தடுத்து செரிமானத்தை பாதிக்கும்.
06. சாப்பிடும் போது சாப்பாட்டில் கவனத்தை வைக்க வேண்டும். நம் பார்வையும் கவனமும் வேறு எங்கும் இல்லாமல் உணவை உற்று நோக்கிச் சாப்பிடவேண்டும்.
07. உணவைக் கையால் எடுத்துச் சாப்பிடவேண்டும். நம் கை உணவில் படுவது மிகவும் நல்லது.
08. சாப்பிட முன் 30 நிமிடமும், சாப்பிடும்போது, சாப்பிட்டபின் 30 நிமிடமும் தண்ணீர் குடிக்கக் கூடாது, (தேவைப்பட்டால். தொண்டையை நனைக்கும்படி சிறிது குடிக்கலாம். தண்ணீர் குடிப்பது செரிமானத்திற்காக உற்பத்தியாகும் அமிலத்தை நீர்த்து தீங்கை ஏற்படுத்தும்)
09. தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும், புத்தகம் வாசித்துக்கொண்டும் யாருடனாவது பேசிக்கொண்டும் சாப்பிடக் கூடாது.
10. சம்மணமிட்டு சாப்பிட வேண்டும். இது உடலில் பரவும் சக்தியை வயிற்றுப் பகுதியில் தடுத்து, தேக்கி செரிமானத்திற்கு உதவும். காலைத்தொங்கவிட்டு நாற்காலியில் அமர்ந்து உண்பது நல்லதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தாய்மார் குழந்தைகளுடன் இருந்து சாப்பிடக் கூடாது.
12. உணவு உண்ணும்போது மன உளைச்சல், சண்டை, கோபம் போன்ற உணர்ச்சிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
13. கை கால் முகம் கழுவிச் சாப்பிட வேண்டும்.
14. குளித்தபின் 45 நிமிடம் சாப்பிடக் கூடாது, சாப்பிடபின் 2.30 மணி நேரம் குளிக்கக் கூடாது
15. அளவு சாப்பாட்டைத் தவிர்த்து பசிக்குச் சாப்பிடுங்கள், ஏப்பம் வந்தால் அத்துடன் நிறுத்தலாம். எப்படி சாப்பிடுவது என்று அறிந்து சாப்பிட்டால், உணவுக் கட்டுப்பாடின்றி எதையும் சாப்பிடலாம்.
16. தண்ணீர் சுத்தமாக இருந்தால். தண்ணீரைக் கொதிக்க வைத்தோ, வடிகட்டியோ குடிக்கக் கூடாது. தண்ணீரை மண் பானையில் ஊற்றி வைத்துக் குடிக்கலாம்.
17. பசி வந்து சாப்பிட வேண்டும். தாகம் வந்து தண்ணீர் அருந்த வேண்டும். சோர்வு வந்து ஓய்வு எடுக்க வேண்டும் தூக்கம் வந்து தூங்க வேண்டும்.
18. காலையில் பல் துலக்குவதை விட, இரவில் கட்டாயம் பல் துலக்கி படுக்கைக்குச் செல்ல வேண்டும்.
19. இரவுப் படுக்கைக்கு நேரத்திற்குச் சென்று, விடியற்காலை எழுந்து குளிக்கும் பழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டும். காலை நேரத்தில்தான் பித்தம் உடலில் பரவும். அப்போது குளிப்பது உடம்பிற்கு நல்லது.
20. தூங்கத் தயாராவதற்கு முன் மனதைப் பாதிக்கும் பேச்சு, அதிர்ந்த சிந்தனைகள், செயல்பாடுகள் போன்றவை இல்லாமல் அமைதியான சூழ்நிலையில் இருந்து படுக்கைக்குச் சென்றால் தூக்கம் நன்றாக வரும்.
21. படுக்கையில் தலைமாட்டில் செல்போன் போன்ற கதிர்வீச்சுக்கள் உள்ளவற்றை வைத்துக்கொள்ளாமல், வேறு அறையில் அல்லது தூரத்தில் வைத்துவிட வேண்டும்.
22. உணவு, உறக்கம், உழைப்பு, ஓய்வு, உடற்பயிற்சி, உறவு ஆகியவை சரியாக வைத்திருப்பதே உடல்நலத்திற்கு முக்கியகாரணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் அருந்தி ஒவ்வொரு நாளையும் ஆரம்பிக்கவும். தண்ணீர் குடித்து நாளை முடிக்கவும்.
24. தேனீர், கோப்பி போன்றவற்றை தவிர்த்து அல்லது குறைத்து அதற்குப் பதில் சத்துமா, கஞ்சி, சூப் போன்றவைகள் நல்லது.
25. நாற்பது வயதிற்கு மேல் சைவ உணவை உண்டு. அசைவ உணவைக் குறைத்துக் கொள்வது நல்லது.
26. தலைவலி, உடல்வலி என்று எதற்கெடுத்தாலும் ஒரு மாத்திரையை போட்டுக்கொள்வது நல்லதல்ல. எண்ணைக் குளியல், கஷாயம் போன்ற இயற்கை மருத்துவ முறையைக் பின்பற்றுவது நல்லது.
27. கோபம், எதிர்பார்ப்பு, துக்கம், ஏமாற்றம், தோல்வி, அவமானம் போன்ற உணர்ச்சிகள் உடல் நலத்தை மிகவும் பாதிக்கவல்லது. இவைகளைப் போக்கும் வழிமுறைகளை அறிந்து நல்ல நூல்கள், நண்பர்கள், மருத்துவர்கள் உதவியுடன் உணர்ச்சிகளைக் குறைத்து அதில் மூழ்கிவிடாமல் வாழ்வது நலம்.
28. எதிர்காலத்தை நோக்கி, திட்டமிட்டு இறந்தகாலத்தை இழந்து விடாமல் ஒவ்வொருநொடியும் ரசித்து வாழ்தல், சிரித்த முகத்துடன் இருத்தல், நேர்மையான சிந்தனையை கொண்டிருத்தல், உள்ளொன்று வைத்து புறம் பேசமால் இருத்தல், குழந்தைத் தன்மையை கடைப்பிடித்தல், இறுக்கமாக இல்லாமல் வெளிப்படையாக இலகுவாக இருத்தல், எண்ணம், சொல், செயல், எழுத்து, வாழ்க்கை ஆகியவற்றில் முரண்பாடு இல்லாமல் இருத்தல் போன்றவை நலம்.
29. ஆண்டிற்குச் சிலமுறை, தினம் செய்யும் வேலைகளில் இருந்து விடுபட்டு, பிடித்த இடத்திற்கு, பிடித்த நண்பர்களுடன், குடும்பத்துடன்,உறவினர்களுடன் சுற்றுலா செல்லுதல் மனதை மகிழ்ச்சிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையான முறையில் வீட்டில் செய்யப்படும் மருத்துவ குறிப்புக்கள்

01. வெந்தயத்தை மட்டும் ஊற வைத்து நன்கு அரைத்து தலையின் முடி, வேர்க் கால்களில் தடவி வைத்து நன்கு ஊறியபின், தலைமுடியை அலசினால், முடி நன்கு வளருவதுடன், கண் எரிச்சல், உடல் சூடு தணியும்.

02. வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும் வெண்ணெயையும் கலந்து குடித்துவிடுங்கள். சிறிது நேரத்திலேயே குணம் தெரியும்.

03. புதினா விதையை வாயில் போட்டு மென்று கொண்டிருந்தால், பல்லில் ஏற்படும் கூச்சம் மறையும்.

04. குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிய நாளில் மட்டும் கீரை சாப்பாட்டுக்கு கொடுக்கக் கூடாது.

05. சீதபேதி கடுமையாக உள்ளதா? ஊறவைத்த வெந்தயத்தை அரைத்து தயிரில் கலந்து 3 வேளை கொடுக்க வேண்டும்.

06. அடிக்கடி ஏப்பம் வருகிறதா? வேப்பம்பூவை தூள் செய்து 4 சிட்டிகை எடுத்து, இஞ்சிச் சாறுடன் கலந்து உட்கொண்டால் குணமாகும்.

07. உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.

08. வல்லாரைக் கீரையை நிழலில் காயவைத்து பொடித்து தினமும் ஒரு தேக்கரண்டி உண்டு வந்தால் நினைவாற்றல் பெருகும்.

09. கரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும்.

10. எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும், நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. எறும்புகள் போன்ற பல்வேறு பூச்சிகள் கடித்து வலி, வீக்கம் போன்றவை ஏற்பட்டால் வெங்காயத்தை நறுக்கி அந்த இடத்தில் தேய்க்கவும்.
12. கொழு கொழுவென குண்டாக இருப்பவனுக்கு, உடல் இறுகி மெலிய, கொள்ளுப் பயறு (Horsegram) கொடுக்க வேண்டும்.
13. எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைத்துக் காணப்படுவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.
14. கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

**ஆலயங்களுக்குச் செல்லும் போது கவனிக்கவேண்டியவை**

- ஆசாரத்துடன் செல்ல வேண்டும்.
- ஆலயத்தில் பலிபீடத்திற்கு முன் நமஸ்காரம் செய்ய வேண்டும்
- நமஸ்காரம் செய்யும் போது சந்நிதிகள், பெரியோர்கள் இல்லாத பக்கமாகக் கால்கள் நீட்ட வேண்டும்
- திரைபோட்டிருக்கும் போது நமஸ்காரம் செய்யக்கூடாது
- ஆலயத்துள் மனிதர்கள் ஒருவரை ஒருவர் நமஸ்காரம் செய்யக்கூடாது
- ஆலயத்துள் தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரம் விஷயங்களை மட்டும் பேசவேண்டும்
- சந்நிதிகளை மறைக்காமல் ஓரமாக நின்று மற்றவர்களும் தரிசனம் செய்யும்படி இடம்விட்டு நின்று தரிசனம் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய விரதங்கள்

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | தைப்பூசம் |
| **நாள்** | : | தைமாத பூச நட்சத்திரத்தில் |
| **கடவுள்** | : | சிவன், முருகன் |
| **வரலாறு** | : | அபிராமிப்பட்டரின் பிரார்த்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்தது. |
| **பலன்** | : | மகிழ்ச்சியும், மங்களமும் உண்டாகும். துன்பம் நீங்கி இன்பம் மேலிடும் |

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | தை அமாவாசை |
| **நாள்** | : | தை மாத அமாவாசை |
| **கடவுள்** | : | அம்மன் |
| **வரலாறு** | : | அபிராமி பட்டரின் பிரார்த்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்ததினம் |
| **பலன்** | : | இஷ்ட சித்திகள் கிடைக்கும |

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | மாசிமகம் |
| **நாள்** | : | மாசி மாதமக நட்சத்திரத்தில் |
| **கடவுள்** | : | சிவன், அம்மன் |
| **வரலாறு** | : | அம்பிகை தாட்சாயணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இதுவாகும். |
| **பலன்** | : | பாசநீக்கம், முத்திப்பேறு புத்திரப்பேறு அதாவது ஆண் குழந்தை கிடைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | மஹா சிவராத்திரி |
| **நாள்** | : | மாசிமாத தேய்பிறை சதுர்த்தியில் |
| **கடவுள்** | : | சிவன் |
| **வரலாறு** | : | இறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று "இலளிதாதேவி" என்னும் பெயரோடு சத்தியைத் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | தோற்றவிக்க அத்தேவி இலிங்கப்பிரானை வணங்க, அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டுப் பிரம்மா கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டுப் பிரம்மா முதலியோரைப்படைத்துச் சிருட்டித் தொழிலை ஆரம்பிப்பார். |
| **பலன்** | : | மனநிறைவான இவ்வுலக வாழ்விற்கும், மோட்ச பேற்றுக்குமான ஒப்பற்ற விரதம் |

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | பங்குனி உத்தரம் |
| **நாள்** | : | பங்குனி மாத உத்திர நட்சத்திரத்தில் |
| **கடவுள்** | : | சிவன் |
| **வரலாறு** | : | உலக மாதவாகிய உமாதேவியார் மலையரசன் மகளாக திரு அவதாரம் செய்து சிவபெருமானைத் திருமணம் செய்தது இத்தினமாகும். |
| **பலன்** | : | நீண்ட நாட்களாக திருமணம் தடைப்படுபவர்களுக்கும், புத்திர பாக்கியம் வேண்டுபவர்களுக்கும் சிறப்பான விரதம். |

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | சித்திரைப் பௌர்ணமி |
| **நாள்** | : | சித்திரை மாத பௌர்ணமி திதியில் |
| **கடவுள்** | : | அம்மா இல்லாதவர்கள் |
| **வரலாறு** | : | எமது தலைவிதியை நிர்ணயிக்கும் எமது வாழ்நாள் கணக்குகளை எழுதிப்பேணும் யமதர்மராஜனின் கணக்குப்பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்ததினம். |
| **பலன்** | : | பெற்றோரின் சிவகதிக்கு, பாவச்சுமை குறையும் |

| | | |
|---|---|---|
| **விரதம்** | : | வைகாசி விசாகம் |
| **நாள்** | : | வைகாசி மாத விசாக நட்சத்திரம் |
| **கடவுள்** | : | முருகன் |
| **வரலாறு** | : | அசுரர்களை அழித்தொழித்துத் தேவர்களைக் காத்தருளியதன் மூலம் அதர்மத்தை ஒழித்துத் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தை நிலை நாட்டியது. சரவணப் பொய்கையில் முருகப்பெருமான் திருவவதாரம் செய்த தினம்.

**பலன்** : இன்னல்கள் தீரும், துன்பங்கள் கஷ்டங்கள் தீரும்

**விரதம்** : ஆனி உத்தரம்

**நாள்** : ஆனி மாத உத்திர நட்சத்திரத்தில்

**கடவுள்** : சிவன்

**வரலாறு** : சிவபெருமான் நடராஜர் என்ற நாமத்தில் தனது அடியார்களுக்காகத் தில்லையில் திருநடனம் புரிந்தது இத்தினத்திலாகும்.

**பலன்** : சிவனின் இஷ்ட சித்திகளைப் பெறலாம்

**விரதம்** : ஆடி அமாவாசை

**நாள்** : ஆடி மாத அமாவாசை திதியில்

**கடவுள்** : அப்பா இல்லாதவர்கள்

**வரலாறு** : இத்தினம் பிதிர்க்கடன் செய்வதற்குச் சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டிலீடுபட்டுத் தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அமைகின்றன.

**பலன்** : பெற்றோரின் சிவகதிக்கு ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைதல்

**விரதம்** : ஆடிப்பூரம்

**நாள்** : ஆடி மாத பூர நட்சத்திரத்தில்

**கடவுள்** : அம்மன்

**வரலாறு** : உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினம்

**பலன்** : மங்களமான வாழ்வு கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரதம்** : ஆடிச் செவ்வாய்
**நாள்** : ஆடி மாத செவ்வாய்க் கிழமையில்
**கடவுள்** : அம்மன்
**வரலாறு** : இத்தினம் அம்பாள் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.
**பலன்** : மாங்கல்ய பேறு, மகப்பேறு கிடைக்கும்

**விரதம்** : ஆவணிச் சதுர்த்தி
**நாள்** : ஆவணி மாத வளர்பிறை விநாயகர் சதுர்த்தித் திதியிலும், மாதம் தோறும் வரும் சதுர்த்தித் திதியிலும் பிடித்தல் வேண்டும்.
**கடவுள்** : விநாயகர்
**வரலாறு** : விநாயகப்பெருமான் திருவவதாரம் செய்த தினம்
**பலன்** : நினைத்த காரியம் கைகூடும்

**விரதம்** : ஆவணி ஞாயிறு
**நாள்** : ஆவணிமாத ஞாயிற்றுக்கிழமையில்
**கடவுள்** : சூரியன்
**வரலாறு** : சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது.
**பலன்** : உஷ்ணம் சம்பந்தமான நோய் நீங்கும்

**விரதம்** : நவராத்திரி
**நாள்** : புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை முதல் நவமி வரையுள்ள 9 நாட்கள்
**கடவுள்** : அம்மன்
**வரலாறு** : கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாகும்.
**பலன்** : இஷ்ட சித்திகள் கிடைக்கும், மனத்தைரியம், உடல் தைரியம், அஷ்ட ஐஸ்வரியம், கலைஞானம் முதலான கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரதம்** : புரட்டாதிச் சனி

**நாள்** : புரட்டாதி மாத சனிக்கிழமையில்

**கடவுள்** : சனி

**வரலாறு** : புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தர வல்லனவாகையால் இத்தினம் சனீஸ்வர வழிபாட்டிற்குச் சிறப்பான நாளாகும்.

**பலன்** : சனீஸ்வர தோஷம் நிவர்த்தி அடைவதோடு சிவன், விஷ்ணு ஆகிய தெய்வங்களின் அருள் கிடைக்கும்

**விரதம்** : கேதாரகௌரி விரதம்

**நாள்** : ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையீறாக 21 நாட்கள்

**கடவுள்** : சிவன்

**வரலாறு** : உமாதேவியார் சிவபெருமானை நோக்கி சிவபூசை செய்து அர்த்த நாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால்.

**பலன்** : தம்பதிகளுக்கு மகிழ்ச்சியான நல்வாழ்வு. மன நிறைவான திருமணப்பேறு, புத்திரபாக்கியம்

**விரதம்** : கந்தசஷ்டி விரதம்

**நாள்** : ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் பிரதமை முதல் சஷ்டி வரையிலான 6 நாட்கள்

**கடவுள்** : முருகன்

**வரலாறு** : பிரதமையில் சிவபெருமானது நெற்றியிலிருந்து தெறித்த பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறுருவாக, அதனை உமாதேவியார் எடுக்க ஆறுதிருமுகமும், பன்னிரண்டு திருக்கையுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாள்.

**பலன்** : புத்திர பாக்கியத்திற்கும், எல்லா நன்மைகளும் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் : ஐப்பசி வெள்ளி

நாள் : ஐப்பசி மாதவெள்ளிக்கிழமையில்

கடவுள் : முருகன்

வரலாறு : சுக்கிரவராம் என்றால் வெள்ளிக்கிழமை என்பது பொருள். வெள்ளிக்கிழமை விரதமாவது ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை தோறுஞ்சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும்.

பலன் : மங்கள வாழ்வு கிடைக்கும்

விரதம் : சோமவார விரதம்

நாள் : கார்த்திகை மாத திங்கட்கிழமை முதல் மாதந்தோறும் அனுஷ்டித்தல்

கடவுள் : சிவன்

வரலாறு : கிருதயுகம் தோன்றியதும் சந்திரன் சிவபெருமானின் முடியில் அமரும் பேற்றினைப் பெற்றதும் கார்த்திகை சோமவாரத்திலே தான் எனவே இம்மாதத்து திங்கட்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது.

பலன் : ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுகின்றது. இறந்த முன்னோர்களை நற்கதி அடைய வைக்கிறது.

விரதம் : விநாயக சஷ்டிவிரதம்

நாள் : கார்த்திகை மாததேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையிலான 21 நாட்கள்

கடவுள் : விநாயகர்

வரலாறு : விநாயகப்பெருமான் கஜமுகாசுரனைச் சம்சாரம் செய்த நாள்

பலன் : நினைத்த காரியம் கைகூடும், கஷ்டங்கள் விலகும், மங்களம் உண்டாகும், சாபவிமோசனம் நீங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் : பிரதோச விரதம்

நாள் : மாதம் தோறும் வரும் வளர்பிறை தேய்பிறை திரியோதசித் திதியில் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களுள் வரும் சனிப்பிரதோஷத்தில் ஆரம்பித்தல் வேண்டும்.

கடவுள் : சிவன்

வரலாறு : பிருதிவியிலுள்ள தீர்த்தங்களெல்லாம் பிரதோஷ வேளையில் சிவதரிசனத்தின் பொருட்டு நந்தி தேவரை வந்தடைவதாகப் புராணங்கள் கூறுவதனால், இந் நேரத்தில் நந்திதேவரது இரண்டு கொம்புகளுக்கும் இடையால் சிவதரிசனஞ் செய்தல் மிகவும் உத்தமம்.

பலன் : இன்பம், மகப்பேறு, தனம், செல்வம், நலம், ஞானம், புண்ணியம், முத்தி முதலியவை பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனவரி | 10 | சர்வதேச சிரிப்பு தினம் |
| 02. | ஜனவரி | 12 | தேசிய இளைஞர் தினம் |
| 03. | ஜனவரி | 27 | யூதர்களால் பெருந்தொகையாக கொல்லப்பட்டோர் நினைவு தினம் |
| 04. | ஜனவரி | 31 | சர்வதேச தொழுநோயாளர் தினம் |
| 05. | பெப்ரவரி | 4 | சர்வதேச புற்றுநோய் தினம் |
| 06. | பெப்ரவரி | 6 | பெண் உறுப்பு அழித்தல் ஒழிப்புத் தினம் |
| 07. | பெப்ரவரி | 11 | விஞ்ஞானத்தில் சிறுமியர் மற்றும் பெண்களுக்கான சர்வதேச தினம் |
| 08. | பெப்ரவரி | 13 | உலக வானொலி தினம் |
| 09. | பெப்ரவரி | 14 | உலக காதலர் தினம் |
| 10. | பெப்ரவரி | 20 | சமூக நீதிக்கான சர்வதேச தினம் |
| 11. | பெப்ரவரி | 21 | சர்வதேச தாய்மொழி தினம் |
| 12. | பெப்ரவரி | 22 | சர்வதேச சாரணர் தினம் |
| 13. | பெப்ரவரி | 28 | தேசிய விஞ்ஞான / அறிவியல் தினம் |
| 14. | பெப்ரவரி | 28 | போக்குவரத்து தினம் |
| 15. | மார்ச் | 01 | எயிட்ஸ் நோயாளிகளை அலட்சியப் படுத்தல் ஒழிப்புத் தினம் |
| 16. | மார்ச் | 03 | சர்வதேச வன வாழ்க்கை தினம் |
| 17. | மார்ச் | 08 | சர்வதேச மகளிர் தினம். |
| 18. | மார்ச் | 11 | பொது நலவாய தினம் |
| 19. | மார்ச் | 15 | சர்வதேச நுகர்வோர் தினம் |
| 20. | மார்ச் | 18 | சர்வதேச ஊனமுற்றோர் தினம் |
| 21. | மார்ச் | 20 | சந்தோசத்துக்கான சர்வதேச தினம் |
| 22. | மார்ச் | 20 | பிரெஞ்சு மொழி தினம் |
| 23. | மார்ச் | 21 | உலக கவிதை தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24. | மார்ச் | - | 21 | - | உலக வன தினம் |
| 25. | மார்ச் | - | 21 | - | இனவேறுபாட்டை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் |
| 26. | மார்ச் | - | 21 | - | நவ்ரிஸ்க்கான சர்வதேச தினம் |
| 27. | மார்ச் | - | 21 | - | மூளை வளர்ச்சியற்ற சிறுவர் தினம் |
| 28. | மார்ச் | - | 22 | - | சர்வதேச தண்ணீர் தினம் |
| 29. | மார்ச் | - | 23 | - | சர்வதேச வளிமண்டல தினம் |
| 30. | மார்ச் | - | 24 | - | சர்வதேச சயரோக ஒழிப்பு தினம் |
| 31. | மார்ச் | - | 24 | - | பாரிய மனித உரிமைகள் மீறல்களும் பலியானவர்கள் கௌரவமும் பற்றி அறிவதற்கான உரிமைத்தினம் |
| 32. | மார்ச் | - | 25 | - | அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு ஊடாக நடைபெற்ற அடிமை வியாபாரத்திற்கு பலியனோர் தினம் |
| 33. | மார்ச் | - | 25 | - | தடுத்து வைக்கப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உத்தியோ கத்தர்களுடன் ஐக்கியத்திற்கான தினம் |
| 34. | மார்ச் | - | 27 | - | சர்வதேச நாடக தினம் |
| 35. | ஏப்ரல் | - | 01 | - | சர்வதேச முட்டாள் தினம் |
| 36. | ஏப்ரல் | - | 02 | - | சர்வதேச உளவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் பற்றிய விழிப்புணர்வுத் தினம் |
| 37. | ஏப்ரல் | - | 04 | - | சுரங்கங்கள் பற்றிய விழிப்பு ணர்வுகளும், செய்ய வேண்டிய உதவிகளுக்கான தினம் |
| 38. | ஏப்ரல் | - | 06 | - | சமாதானத்துக்கான விளையாட்டு அபிவிருத்திக்கான தினம் |
| 39. | ஏப்ரல் | - | 07 | - | றுவாண்டா நாட்டில் இனஅழிப்பு பிரதிபலிப்பும், சர்வதேச தினமும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 40. ஏப்ரல் | - | 07 | - | சர்வதேச சுகாதார தினம் |
| 41. ஏப்ரல் | - | 10 | - | சர்வதேச அன்னையர் தினம் |
| 42. ஏப்ரல் | - | 12 | - | சர்வதேச விண்வெளி தினம் |
| 43. ஏப்ரல் | - | 15 | - | சர்வதேச நூலக தினம் |
| 44. ஏப்ரல் | - | 17 | - | சர்வதேச இரத்த தினம் |
| 45. ஏப்ரல் | - | 18 | - | சர்வதேச மரபுரிமை தினம் |
| 46. ஏப்ரல் | - | 20 | - | சீன மொழித் தினம் |
| 47. ஏப்ரல் | - | 21 | - | புதிய ஆக்கங்களும் கண்டு பிடிப்புக்களுக்குமான தினம் |
| 48. ஏப்ரல் | - | 21 | - | Chernbyl நாட்டுப் பயங்கரம் நினைவு கூறலுக்குமான தினம் |
| 49. ஏப்ரல் | - | 22 | - | சர்வதேச புவி / பூகோள பாதுகாப்பு தினம் |
| 50. ஏப்ரல் | - | 23 | - | சர்வதேச நூலக சேவைத் தினம் |
| 51. ஏப்ரல் | - | 23 | - | சர்வதேச புத்தக மற்றும் ஆக்கவுரிமைதினம் |
| 52. ஏப்ரல் | - | 23 | - | ஸ்பானிஸ் மொழி தினம் |
| 53. ஏப்ரல் | - | 23 | - | ஆங்கில மொழி தினம் |
| 54. ஏப்ரல் | - | 25 | - | சர்வதேச மலேரியா தினம் |
| 55. ஏப்ரல் | - | 26 | - | சர்வதேச பாதிக்கப்பட்ட சிறுவர் தினம் |
| 56. ஏப்ரல் | - | 26 | - | அறிவு ஒரு சொத்து அதற்கான தினம் |
| 57. ஏப்ரல் | - | 28 | - | சர்வதேச துக்க தினம் (வேலைத்தளங்களில் காயமடைதல் - இறத்தல்) |
| 58. ஏப்ரல் | - | 28 | - | வேலை செய்யும் இடத்தில் சுகாதாரமும் பாதுகாப்பும் தேவை என்பதை வலியுறுத்தும் தினம் |
| 59. ஏப்ரல் | - | 29 | - | உலக நடன தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60. | ஏப்ரல் | - | 29 | - | இரசாயன யுத்தமும், அதில் இறந்தவர்களினதும் நினைவு தினம் |
| 61. | ஏப்ரல் | - | 30 | - | ஜாஸ் இசை பற்றிய சர்வதேச தினம் |
| 62. | மே | - | 01 | - | சர்வதேச தொழிலாளர் தினம் |
| 63. | மே | - | 02 | - | உலக ரோனா (Tuna) மீன்கள் தினம் |
| 64. | மே | - | 03 | - | சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம் |
| 65. | மே | - | 08 | - | சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினம் |
| 66. | மே | - | 08 | - | சர்வதேச நூதனசாலை தினம் / சர்வதேச முஸ்லிம் தினம் |
| 67. | மே | - | 08 - 09- | | இரண்டாம் உலக யுத்தத்தில் உயிரிழந்தோரை நினைவு கூறும் மீள் ஒற்றுமைக்குமான தினம் |
| 68. | மே | - | 10 | - | சர்வதேச இடம்பெயர் பறவைகள் தினம் |
| 69. | மே | - | 10 | - | சர்வதேச வெசக் / பூரண தினம் |
| 70. | மே | - | 11 | - | சர்வதேச தொடர்பு சாதன தினம் |
| 71. | மே | - | 12 | - | சர்வதேச தாதியர் தினம் |
| 72. | மே | - | 15 | - | சர்வதேச குடும்ப நலன் தினம் |
| 73. | மே | - | 17 | - | சர்வதேச தந்தையர் தினம் |
| 74. | மே | - | 18 | - | சர்வதேச நூதனசாலைத் தினம் |
| 75. | மே | - | 21 | - | கலாசாரத்தில் பல்வேறு தன்மைகளும் பரிமாற்றங்களுக்குமான நினைவு தினம் |
| 76. | மே | - | 22 | - | உயிரியல் ரீதியான வேறுபாடுகளை நினைவு கூரும் தினம் |
| 77. | மே | - | 23 | - | மகப்பேற்றில் ஏற்படக்கூடும் சத்திர சிகிச்சை தொடர்பான நினைவு தினம் |
| 78. | மே | - | 28 | - | உலகப்பெண்களின் உடல் நலத்தை வலியுறுத்தும் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 76. | மே | - | 29 | - | சர்வதேச அமைதி பேணுவோர் தினம் (ஐக்கிய நாடுகள்) |
| 77. | மே | - | 31 | - | சர்வதேச புதைத்தல் எதிர்ப்பு தினம் |
| 78. | யூன் | - | 01 | - | சர்வதேச கூட்டுறவு தினம் |
| 79. | யூன் | - | 01 | - | பெற்றோருக்கான சர்வதேச தினம் |
| 80. | யூன் | - | 04 | - | ஆக்கிரமிப்பிரால் பலியாகும் குற்றமற்ற சிறுவர்களுக்கான நினைவு தினம் |
| 81. | யூன் | - | 05 | - | சர்வதேச சுற்று சூழல் தினம் |
| 82. | யூன் | - | 06 | - | ரஷ்சிய மொழிதினம் |
| 83. | யூன் | - | 07 | - | சர்வதேச தொல்பொருளியலாளர் தினம் |
| 84. | யூன் | - | 08 | - | சர்வதேச மீன்பிடித் தினம் |
| 85. | யூன் | - | 08 | - | சர்வதேச சமுத்திர தினம் |
| 86. | யூன் | - | 12 | - | குழந்தைத் தொழிலாருக்கு எதிரான சர்வதேச தினம் |
| 87. | யூன் | - | 13 | - | வெள்ளைத் தோலுடன் தலையில் மயிரின்றிப் பிறக்கும் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வுத் தினம் |
| 88. | யூன் | - | 14 | - | இரத்தானம் செய்வோருக்கான சர்வதேச தினம் |
| 89. | யூன் | - | 15 | - | முதியோர்கள் பராமரிப்பின்றி கைவிடப்படல் பற்றிய விழிப்புணர்வுத் தினம் |
| 90. | யூன் | - | 16 | - | குடும்பங்களுக்காக பணம் சேமித்தல் பற்றிய விழிப்புணர்வுத் தினம் |
| 91. | யூன் | - | 17 | - | நிலம் பாலைவனமாதல் மற்றும் கடும்வரட்சி யாதலை எதிர்த்தல் பற்றி விழிப்புணர்வூட்டும் தினம் |
| 92. | யூன் | - | 18 | - | பயன் தரும் உணவு தயாரிப்பு பற்றிய விழிப்புணர்வு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 93. | யூன் | - | 19 | - | யுத்தத்தின் போது பாலியல் வன்முறை தவிர்த்தல் பற்றிய சர்வதேச தினம் |
| 94. | யூன் | - | 20 | - | சர்வதேச அகதிகள் தினம் |
| 95. | யூன் | - | 21 | - | சர்வதேச யோகா தினம் |
| 96. | யூன் | - | 23 | - | ஐக்கிய நாடுகள் பொதுச்சேவை தினம் |
| 97. | யூன் | - | 23 | - | சர்வதேச விதவைகள் தினம் |
| 98. | யூன் | - | 26 | - | சித்திரவதைக்குட்பட்டோருக்கு ஆதவரளித்தல் பற்றிய சர்வதேச தினம் |
| 99. | யூன் | - | 26 | - | சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் |
| 100. | யூன் | - | 27 | - | சர்வதேச நீரிழிவாளர் தினம் |
| 101. | யூன் | - | 27 | - | நுண் - சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் |
| 102. | யூன் | - | 29 | - | வெப்பவலையம் பற்றிய அறிவூட்டல் தினம் |
| 103. | யூன் | - | 30 | - | சூரியனைச் சுற்றிவரும் சிறிய கிரகங்கள் பற்றி அறிவூட்டும் தினம் |
| 104. | யூலை | - | 01 | - | சர்வதேச கூட்டுறவாளர் தினம் |
| 105. | யூலை | - | 05 | - | சர்வதேச சுற்றாடல் தினம் |
| 106. | யூலை | - | 11 | - | சர்வதேச குடித்தொகை தினம் |
| 107. | யூலை | - | 15 | - | சர்வதேச இளைஞர் நுட்பதினம் |
| 108. | யூலை | - | 18 | - | நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் |
| 109. | யூலை | - | 28 | - | நெல்சன் அகதிகள் தினம் |
| 110. | யூலை | - | 28 | - | செங்கண் மாரி பற்றிய விழிப்பூட்டல் தினம் |
| 111. | யூலை | - | 30 | - | சர்வதேச நட்புறவு தினம் |
| 112. | யூலை | - | 30 | - | நபர்களைக் கடத்துவதற்கு எதிரான தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. ஆகஸ்ட் - 01 - சர்வதேச தாய்ப்பால் ஊட்டும் தினம்
114. ஆகஸ்ட் - 01 - சர்வதேச நட்புறவு தினம்
115. ஆகஸ்ட் - 06 - சர்வதேச சமாதான தினம்
116. ஆகஸ்ட் - 09 - உலகில் உள்ள ஆதிவாசிகள் பற்றிய சர்வதேச தினம்
117. ஆகஸ்ட் - 12 - சர்வதேச இளைஞர் தினம்
118. ஆகஸ்ட் - 19 - சர்வதேச மனிதாபிமான தினம்
119. ஆகஸ்ட் - 21 - சர்வதேச கத்தோலிக்க இளைஞர் தினம்
120. ஆகஸ்ட் - 21 - சர்வதேச விளையாட்டுத் தினம்
121. ஆகஸ்ட் - 23 - அடிமை வியாபாரம் மற்றும் அதனை இல்லாது ஒழித்தமையை நினைவுகூறும் சர்வதேசதினம்
122. ஆகஸ்ட் - 29 - அணுப்பரிசோதனைக்கு எதிரான சர்வதேச தினம்
123. ஆகஸ்ட் - 30 - கட்டாயப்படுத்தி காணாமல் போகச் செய்யப்பட்டோர் பற்றிய விழிப்புணர்வுத் தினம்
124. செப்ரெம்பர் - 5 - தர்மம் செய்தல் பற்றிய சர்வதேச தினம்
125. செப்ரெம்பர் - 8 - சர்வதேச எழுத்தறிவு தினம்
126. செப்ரெம்பர் - 8 - சர்வதேச பத்திரிகையாளர் தினம்
127. செப்ரெம்பர் - 12 - தெற்கு - தெற்கு ஒத்துழைப்புக்கான ஐக்கிய நாடுகள் தினம்
128. செப்ரெம்பர் - 15 - ஜனநாயகத்திற்கான சர்வதேச தினம்
129. செப்ரெம்பர் - 16 - ஓசோன் படலம் அழிந்து விடாமல் காப்பது பற்றிய விழிப்புணர்வு பற்றிய தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 130. | செப்ரெம்பர் | - | 21 | - | சர்வதேச சமாதான தினம் |
| 131. | செப்ரெம்பர் | - | 26 | - | அணுவாயுதங்கள் முழுவதுமாக அகற்றுவதற்கான சர்வதேச தினம் |
| 132. | செப்ரெம்பர் | - | 27 | - | சர்வதேச சுற்றுலா தினம் |
| 133. | செப்ரெம்பர் | - | 28 | - | தகவல் உலக பயன்பாட்டுத் தினம் |
| 134. | செப்ரெம்பர் | - | 28 | - | விசர் நாய் கடி பற்றிய விழிப்புணர்வும் தடுக்கும் வழியும் பற்றிய விழிப்புணர்வுத் தினம் |
| 135. | செப்ரெம்பர் | - | 28 | - | கடல் சார்ந்த நிலங்களும் பயன்பாடுகளும் பற்றிய விழிப்புணர்வூட்டும் தினம் |
| 136. | செப்ரெம்பர் | - | 30 | - | சர்வதேச மொழி பெயர்ப்புத் தினம் |
| 137. | அக்டோபர் | - | 01 | - | சர்வதேச சிறுவர் தினம் |
| 138. | அக்டோபர் | - | 01 | - | சர்வதேச வயோதிபர் தினம் |
| 139. | அக்டோபர் | - | 02 | - | சர்வதேச வன்முறை இல்லாமைக்கான தினம் |
| 140. | அக்டோபர் | - | 02 | - | வன்முறை ஒழிப்பு பற்றிய சர்வதேச தினம் |
| 141. | அக்டோபர் | - | 03 | - | சர்வதேச மதுவிலக்கு தினம் |
| 142. | அக்டோபர் | - | 03 | - | சர்வதேச நல்லொழுக்க தினம் |
| 143. | அக்டோபர் | - | 03 | - | உலகத்தில் மக்கள் வாழும் பூமி பற்றிய விழிப்புணர்வு தினம் |
| 144. | அக்டோபர் | - | 04 | - | சர்வதேச விலங்கு நல தினம் |
| 145. | அக்டோபர் | - | 05 | - | சர்வதேச சிறுமியர் தினம் |
| 146. | அக்டோபர் | - | 05 | - | சர்வதேச குடியிருப்பு தினம் |
| 147. | அக்டோபர் | - | 05 | - | சர்வதேச ஒஸ்டன் தினம் (சிறுநீர்) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 148. அக்டோபர் | - | 06 | - | சர்வதேச ஆசிரியர் தினம் |
| 149. அக்டோபர் | - | 08 | - | சர்வதேச லயன் தினம் |
| 150. அக்டோபர் | - | 09 | - | சர்வதேச தபால் தினம் |
| 151. அக்டோர்பர் | - | 10 | - | சர்வதேச உளநல தினம் |
| 152. அக்டோபர் | - | 11 | - | சர்வதேச பெண் குழந்தைகள் தினம் |
| 153. அக்டோபர் | - | 13 | - | சர்வதேச அழிவுகளைக் குறைப்பதற்கான சர்வதேச தினம் |
| 154. அக்டோபர் | - | 14 | - | சர்வதேச தரநிர்ண தினம் |
| 155. அக்டோபர் | - | 15 | - | சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் |
| 156. அக்டோபர் | - | 15 | - | சர்வதேச கிராமியப் பெண்கள் தினம் |
| 157. அக்டோபர் | - | 16 | - | சர்வதேச உணவு தினம் |
| 158. அக்டோபர் | - | 17 | - | சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் |
| 159. அக்டோபர் | - | 17 | - | சர்வதேச வியாபார தினம் |
| 160. அக்டோபர் | - | 20 | - | சர்வதேச புள்ளிவிபர தினம் |
| 161. அக்டோபர் | - | 22 | - | சர்வதேச இஸ்லாமிய மகளிர் தினம் |
| 162. அக்டோபர் | - | 24 | - | சர்வதேச ஐக்கிய நாடுகள் தினம் |
| 163. அக்டோபர் | - | 24 | - | சர்வதேச அபிவிருத்தி தகவல் தினம் |
| 164. அக்டோபர் | - | 27 | - | காட்சிகளை கண்ணால் பார்க்கையில்அதன் ஒலியையும் கேட்கக் கூடிய சினிமா பற்றிய விழிப்புணர்வும் அதன் வளர்ச்சியும் தொடர்பான சர்வதேச தினம் |
| 165. அக்டோபர் | - | 30 | - | சர்வதேச சேமிப்பு தினம் |
| 166. அக்டோபர் | - | 31 | - | சர்வதேசவாய் சுகாதார தினம் |
| 167. அக்டோபர் | - | 31 | - | சர்வதேச தலைநகரங்கள் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 168. நவம்பர் | - | 2 | - பத்திரிகையாளர்கள், செய்தி சேகரிப்போர் தொடர்பான குற்றங்களை எதிர்த்தல் |
| 169. நவம்பர் | - | 5 | - சுனாமி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் |
| 170. நவம்பர் | - | 6 | - யுத்தகாலத்தில் சுற்றாடல் அழிக்கப்படல், சேதப்படுத்தல் என்பவற்றைத் தடுத்தல் பற்றிய் சர்வதேச தினம் |
| 171. நவம்பர் | - | 10 | - விஞ்ஞானம், அபிவிருத்திக்கும் சமாதானத்துக்கும் வகையில் பயன்படுத்தல் பற்றிய உலக சமாதான தினம் |
| 172. நவம்பர் | - | 14 | - உலக சலரோக் தினம் |
| 173. நவம்பர் | - | 15 | - சகிப்புத்தன்மையின் அவசியம் பற்றிய விழிப்புணர்வுத் தினம் |
| 174.. நவம்பர் | - | 16 | - உலக தத்துவ சாஸ்திரம் பற்றிய தினம் |
| 175. நவம்பர் | - | 19 | - மலசல கூடம் பற்றி விழிப்புணர்வுத் தினம் |
| 176. நவம்பர் | - | 19 | - தெரு விபத்துக்களில் மரணித்தோரை நினைவு கூறும் தினம் |
| 177. நவம்பர் | - | 20 | - ஆபிரிக்கா தொழில்மய மாக்கப்பட்டமை பற்றிய தினம் |
| 178. நவம்பர் | - | 20 | - சர்வதேச சிறுவர் தினம் |
| 179. நவம்பர் | - | 21 | - உலக தொலைக்காட்சித் தினம் |
| 180. நவம்பர் | - | 25 | - பெண்களுக்கு எதிரான வன்முறை தவிர்ப்பு பற்றிய விழிப்புணர்வு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 181. நவம்பர் | - | 28 | - | பலஸ்தீன மக்களோடு ஒன்று இணைத்தல் பற்றிய சர்வதேச தினம் |
| 182. டிசம்பர் | - | 1 | - | உலக எயிட்ஸ் தினம் |
| 183. டிசம்பர் | - | 2 | - | அடிமைத் தினம் ஒழிக்கப்படல் பற்றிய சர்வதேச தினம் |
| 184. டிசம்பர் | - | 3 | - | அங்கவீனமானோர் தொடர்பான சர்வதேச தினம் |
| 185. டிசம்பர் | - | 5 | - | சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக தன்னார்வத் தொண்டர்கள் தினம் |
| 186. டிசம்பர் | - | 5 | - | சர்வதேச மண் தினம் (நிலம் பண்படுத்தப்பட்டு பயன்பாட்டின் அவசியம் பற்றிய தினம்) |
| 187. டிசம்பர் | - | 6 | - | சாதாரண மக்களும் விமானப் பயணம் செய்தல் பற்றிய சர்வதேச தினம் |
| 188. டிசம்பர் | - | 9 | - | இனஅழிப்புக்குப் பலியானோரை கௌரவித்தலும், தவிர்த்தல் முறைகளும். |
| 189. டிசம்பர் | - | 9 | - | ஊழல் தவிர்ப்பு விழிப்புணர்வு தினம் |
| 190. டிசம்பர் | - | 10 | - | மனித உரிமைகள் தினம் |
| 191. டிசம்பர் | - | 11 | - | மலைகள் தினம் |
| 192. டிசம்பர் | - | 12 | - | பக்கம் சாராத நடுநிலை தினம் |
| 193. டிசம்பர் | - | 18 | - | புலம் பெயர்ந்தோர் தினம் |
| 194. டிசம்பர் | - | 18 | - | அரபு மொழித்தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

14

08

1948



மறைவு

30

09

2017

எமது நண்பர்களான கிண்ணன் மற்றும்

சாந்தனின் பாசமிகு தந்தையார்

அமரர்

## சுப்பிரமணியம் சிவலோகநாதன்

நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட

உங்கள் நினைவால்

நினைவிழக்க முடியாமல் நின்னை நினைக்கின்றோம்

கணப்பொழுது ஆனாலும்

ஆறவில்லை எம்மனத்துயர்

என்றென்றும் உங்கள் நினைவுடன்......

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்

தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல

இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

இந்து இளைஞர் அறிவாலயம்

நோர்வே நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
14
08
1948

உதிர்வு
30
09
2017

அமரர்
## சுப்பிரமணியம் சிவலோகநாதன்

அன்பு எனும் அரவணைப்பில்
அறிவு எனும் ஆழ்கடலில்
தீங்குதனை விரும்பாது!
எல்லோர்க்கும் வழிகாட்டியாய்
இருந்த அன்புத்தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எங்கள் நெஞ்சை விட்டகலாது.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

- பிரிவைப் பகிரும் -
நேர்வே வாழ் நண்பர்கள்

[illegible], 0212250390, [illegible].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14
08
1948

மறைவு
30
09
2017



அமரர்
## சுப்பிரமணியம் சிவலோகநாதன்

விழியினைத் திறந்து விடியல் காட்டி
வழியிதுவென வாழ்வும் காட்டி
எல்லோருக்கும் இமையெனவிருந்து
ஆலமரமாய் அன்புக்கரம் விரித்த – ஐயாவே
அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
இறைவனின் அழைப்பில் – உன் உறவைப்
பிரிந்த உறவுகளின் இதய தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை மனமுருகிப்
பிரார்த்திக்கின்றோம்.

தங்கை குடும்பம்
ந.சிவகுதன் (ராசாத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 14 * 08 * 1948

உதிர்வு 30 * 09 * 2017

கோண்டாவில் வடக்கைப்
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும்
வீரபத்திரர் தேவஸ்தான முன்னாள் நிர்வாக உறுப்பினருமான

## அமரர்.சுப்பிரமணியம் சிவலோகநாதன்

### (சொக்கன்)

இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து நல்லறத்தில்
ஆண்டு பல கழித்து
விதியவன் வினைப் பயனால் விண்ணுலகுக்கு
சென்று விட்டீர்கள்
அன்பான பேச்சு, பண்பான குணம்
பாசமுடன் அரவணைக்கும் குணம் கொண்டவரே!
பார் போற்ற வாழ்ந்து நொடிப்பொழுதில் மறைந்து
குடும்பத்தாரை தவிக்க விட்டீரே!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

03.10.2017

கோண்டாவில் வடக்கு
வீரபத்திரர் தேவஸ்தானமும்,
ஊர் மக்களும்.

சிவரஞ்சனம். T.P : 077 3068982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு"

அன்பின் உறைவிடமாய் இருந்து, எல்லா வழிகளிலும் எம்மை நெறிப்படுத்திய எங்கள் அன்பு அப்பா 30.09.2017ம் திகதி சனிக்கிழமை அன்று நோய்வாய்ப்பட்டு மரணம் அடைந்த வேளையில், எம் குடும்பத் தலைவரின் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நாங்கள் மீளாத்துயரில் இருந்த வேளையில் ஓடோடி வந்து ஆறுதல் கூறி எமக்கு உற்றவிடத்து உதவிகள் பல புரிந்து, உறுதுணையாய் நின்ற உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், மாலைகள் சாத்தியும், மலர்வளையங்கள் சாத்தியும், பதாதைகளை அச்சிட்டு அஞ்சலி தெரிவித்த அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் பிரசுரித்து அஞ்சலி தெரிவித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் துயரைப் பகிர்ந்துகொண்டு தொலைபேசி மூலம் அனுதாபச்செய்திகளை தெரிவித்தோருக்கும், மற்றும் கனடா, நோர்வே போன்ற நாடுகளில் வசிக்கும் சகோதரர்கள் பிள்ளைகளுடன் நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்ட உறவினர்கள், நண்பர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் அமரரின் இறுதி யாத்திரையில் பங்குகொண்டு அந்தியேட்டி மற்றும் இன்றைய வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிற் கலந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மேலும் இம்மலரினை சிறப்புற வடிவமைத்து அச்சிட்டு உதவிய வைரஸ் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

குடும்பத்தினர்

கலைவாணி வீதி,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

* சுப்பிரமணியம் + தங்கம்மா

**சிவலோகநாதன்** | யோகராணி | உலகநாதன் | வைகுந்தநாதன் | ஜெகநாதன். | கமலநாதன் | பே

சிந்துஜா
+
சத்தியலிங்கம்
அஸ்மிதா

கண்ணன்
+
சிவதுர்க்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழி

* பொன்னுத்துரை + செல்வரட்ணம்

வேதநாயகி

சுபந்தினி

ஸ்ரீஸ்கந்தராசா

**அருளேஸ்வரி**

ஸ்ரீபாலச்சந்திரன்

அனுசியா
+
சுரேஸ்நாதன்

சஜித்தா
யஸ்வந்
கிஷானா

பிரசாந்தன்
+
அபிராமி

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம நட்சத்திரங்கள்

| நட்சத்திரம் | எழுத்துக்கள் | தொடர் எழுத்துக்கள் |
|---|---|---|
| அசுவினி | ச, சே, சோ, ல | செ,சை |
| பரணி | லி, லு, லே, லோ | செள, சோ |
| கார்த்திகை | அ, இ, உ, எ | ஆ, ஈ |
| ரோகிணி | ஒ, வ, வி, வு | வா, வி |
| மிருகசீரிடம் | வே, வோ, கா, கி | வை, வொ |
| திருவாதிரை | கு, க, ங, ச | கூ, கா |
| புனர்பூசம் | கே, கோ, ஹ, ஹி | கெ, கை |
| பூசம் | ஹீ, ஹே, ட | கொ, கெள |
| ஆயிலியம் | டி, டு, டே, டோ | மெ, மை |
| மகம் | ம, மி, மு, மே | மா, மீ, மு |
| பூரம் | மோ, டா, டி, டு | மொ, மௌ |
| உத்தரம் | டே,டோ,பா,பி | பா, பி |
| அத்தம் | பூ,ஷ,ண,ட | பூ, மே |
| சித்திரை | பே,போ,ர,ரி | பை, பொ |
| சுவாதி | ரு, ரே, ர, த | தா |
| விசாகம் | தி, து, தே, தே | தூ, தை |
| அனுஷம் | ந, நி, நு, நே | நா, நீ, நூ |
| கேட்டை | நோ, ய, யி, யு | நே, நை |
| மூலம் | யே, யோ, யூ, யி | பு, யூ |
| பூராடம் | பூ, த, பி, டா | ஊ, எ, ஏ |
| உத்தராடம் | பே, போ, ஜ, ஜி | ஒ, ஓ, ஔ |
| திருவோணம் | ஜீ, ஜே, ஜோ, கா | க, கா, கீ |
| அவிட்டம் | க, கீ, கு, கூ | ஞு, ஞா, கே |
| சதயம் | கோ, ஸ, ஸீ, ஸு | தோ, தௌ |
| பூரட்டாதி | ஸே, ஸோ, தா, தீ | நோ, நௌ |
| உத்திரட்டாதி | து, ய, ச, ஶ்ரீ | யா, ஞ |
| ரேவதி | தே, தோ, ச, சி | சா, சி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிய உதவும் அட்டவணை

| கணம் | மிருகம் | விருஷம் | பட்சி |
|---|---|---|---|
| தேவம் | ஆண் குதிரை | எட்டி | இராசாளி |
| மனுஷ | ஆண் யானை | நெல்லி | காகம் |
| ராக்ஷஸ | பெண் ஆடு | அத்தி | மயில் |
| மனுஷ | ஆண் நாகம் | நாவல் | ஆந்தை |
| தேவம் | பெண் சாரை | கருங்காலி | கோழி |
| மனுஷ | ஆண் நாய் | செங்கா | அன்றில் |
| தேவம் | பெண் பூனை | மூங்கில் | அன்னம் |
| தேவம் | ஆண் ஆடு | அரசு | நீர்க் காகம் |
| ராக்ஷஸ | ஆண் பூனை | புன்னை | கிச்சிலி |
| ராக்ஷஸ | ஆண் எலி | ஆல் | ஆண் கழுதை |
| மனுஷ | பெண் எலி | பலா | பெண் கழுகு |
| மனுஷ | எருது | அலரி | கிளுவை |
| தேவம் | பெண் எருமை | அத்தி | பருந்து |
| ராக்ஷஸ | ஆண் புலி | வில்வம் | மரங்கு |
| தேவம் | ஆண் எருமை | மருதம் | தேனீ |
| ராக்ஷஸ | பெண் புலி | விளா | செங்குருவி |
| தேவம் | பெண் மான் | மகிழ் | வானம்பாடி |
| ராக்ஷஸ | ஆண் நாய் | பராய் | சக்ரவாள் |
| ராக்ஷஸ | பெண்நாய் | மரா | செம்பருந்து |
| மனுஷ | ஆண் குரங்கு | வஞ்சி | கௌதாரி |
| மனுஷ | மலட்டுப்பசு | பலா | வலியன் |
| தேவம் | பெண்குரங்கு | எருக்கு | நாரை |
| ராக்ஷஸ | பெண் சிங்கம் | வன்னி | பொன்வண்டு |
| ராக்ஷஸ | பெண் குதிரை | கடம்பு | அண்டங்காகம் |
| மனுஷ | ஆண் சிங்கம் | தேமா | உள்ளான் |
| மனுஷ | பசு | வேம்பு | கேட்டான் |
| தேவம் | பெண் யானை | இலுப்பை | வல்லூறு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



ஏது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
ஏது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
ஏது நடக்க இருக்கிறதோ, அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
ஏது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடையதாகும்"
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



Virus Print

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org